# பெரியாரின் மேடைப் பேச்சுகளில் வாழ்வியல் சிந்தனைகள்

*ரா.சே. பாலாஜி*
முனைவர் பட்ட ஆய்வாளர் (ப/நே)
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்

மலர்: 4
இதழ்: 3
மாதம்: ஜனவரி
வருடம்: 2020
P-ISSN: 2454-3993
E-ISSN: 2582-2810

## முன்னுரை

கற்றவர்க்கு இன்பம் நல்குவது இலக்கியம் எனில் கல்லாதவர்க்கு இன்பமும் கருத்தும் நல்குவது மேடைப்பேச்சு ஆகும். எழுத்துப் பணியைக் காட்டிலும் தமது மேடைப் பேச்சுகளின் வழியே புகழ் பெற்றோர் பலராவர். அவர்தம் சீரிய சிந்தனைகளும் ஆழ்ந்த கருத்துகளும் மனித சமூகத்தைப் பக்குவப்படுத்தி நன்னெறியில் நடைபோட உறுதுணைபுரிந்தன. மேடை இலக்கிய வடிவத்தில் புகழ்பெற்ற பல்லோருள் தந்தை பெரியாரும் ஒருவர். பலரும் கூறத் தயங்கிய செய்திகளை எல்லாம் தடையின்றி கூறியதே அவரது மேடைப்பேச்சு வெற்றி பெறக் காரணமாய் இருந்தது. தமது சீரிய சிந்தனைகள் வழி மனித சமூகத்தில் புதியதொரு மறுமலர்ச்சியைத் தோற்றுவித்த பெரியாரின் சிந்தனைகளை கருதுகோளாகக் கொண்டு, வாழ்வியல் என்னும் தளத்தின் மீது, விளக்கமுறைத் திறனாய்வு அணுகுமுறையைப் பின்பற்றி விளக்கி உரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பெரியாரின் மேடைப் பேச்சு

தமிழ்ச் சமூக வரலாற்றில் மக்களின் அறியாமை இருளை அகற்றி, பகுத்தறிவு என்னும் அறிவு ஒளியைப் பரவச் செய்தவர் பெரியார் ஆவார். சீர்திருத்தம், சாதியொழிப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, பெண் விடுதலை, தொழிலாளர் நலன் என்று மனித சமூக வாழ்வியல் முன்னேற்றம் அடைய புதிய சிந்தனைகளைத் தமது மேடைப் பேச்சுகளின் வழியே விதையாக ஊன்றியவர் பெரியார்.

ஈ.வெ.ரா. பெரியார் பல மணிநேரம் சொற்பொழிவாற்றும் ஆற்றல் வாய்ந்தவராக விளங்கினார். அவரது பேச்சாற்றலின் சிறப்பை, “அவர் (ஈ.வெ.ரா) பேச்சில் கருத்துச் செலுத்தி பின்னர் தமிழ்நாட்டுக் காளமேகமானார். நாய்க்கர் பேச்சு மழையாகும் கனமழையாகும் கல்மழையாகும் மழை மூன்று மணி நேரம் நான்கு மணிநேரம் பொழியும்!” (சிறந்த பேச்சாளர்கள், ப.14) என்ற திரு.வி.க.வின் பாராட்டுரையை எடுத்தாள்கிறார் மா.சு. சம்பந்தன்.

பெரியாரின் மேடைப்பேச்சின் அழகை தனக்கே உரிய நடையில் கவிஞர் கண்ணதாசன்,

**"மேடையேறி நின்றிடில் ஓர் எழில்!**
**மெய்சிலிர்க்கப் பேசிடில் ஓர் எழில்!**
**தாடை தாங்கும் தாடி அசைந்திடில்**
**தனிப்பெரும் எழில்! கருநிறத் தமிழ்**
**ஆடை காற்றில் அசைந்திடில் ஓர் எழில்!**
**ஈடிலா நம் ஈ.வெ.ரா. வினுக்கு**
**இது புறத்து எழில்! ...**

*(எஸ்.பி. ராஜா, கண்ணதான் மனதில் நின்ற மணிவிழாத் தலைவர்கள், ப.157)*
என்று பாராட்டியுள்ளார்.

"நேரிலும் மேடையிலும் எல்லாம் ஒரே தமிழ். ஒரே நடை, ஒரே பேச்சுத்தான். மேடைக்கு என்று ஒரு தமிழ், அதற்கென்று இழுத்து பிடித்த எதுகை, மோனை அவரிடம் இல்லை... வீட்டிலும் வெளியிலும் இயற்கையாகவே என்ன பேசுவாரோ அவையே தான் மேடைப் பேச்சிலும் அமைந்து இருந்தது" (சமுதாய விஞ்ஞான தந்தை பெரியார், ப.14) என்று தா. பாண்டியன் பெரியாரின் சொற்பொழிவுத் திறத்தைப் பாராட்டிப் போற்றியுள்ளார்.

மேற்கண்ட அறிஞர்களின் பாராட்டுக்கு ஏற்பவே, பெரியார் தம் வாழ்நாள் முழுவதும் முனை மழுங்காத அறிவைப் பயன்படுத்திய பேச்சாளராகவேத் திகழ்ந்தார். தாம் கொண்ட இலட்சியத்தின் உயர்வை, அதன் பயனை மனித சமூக வாழ்வின் உயர்வுக்காகப் பயன்படுத்தியவர். தனது அறிவுக்கு சரி என்று பட்டதையும், உண்மை, நியாயம் என்று பட்டதையும் தமக்குத் தெரிந்த மொழிநடையில் மக்களுக்கு உணர்த்தினார். கற்றறிந்த மேதைகள் கூறத் தயங்கியவற்றையும் துணிவுடன் கூறியவர். இதனால் பல்வேறு எதிர்ப்புக்களை மேடைதோறும் சந்திந்தாலும் தம் கருத்துகளைப் பல மணிநேரம் சொற்பொழிவின் வழி கொண்டு சேர்த்தவராகவே விளங்கினார்.

### கல்வியின் தேவை

மனித இனம் பெற வேண்டியச் செல்வங்களுள் இன்றியமையாதது கல்விச் செல்வமாகும். கல்வி ஒன்றே மனிதகுல வாழ்வில் காணலாகும் அறியாமை, ஏற்றத்தாழ்வு, வேற்றுமைகள், சாதியப் பாகுபாடு, அடிமைத்தனம் முதலியவை ஒழிய அருமருந்து என்று திடமாக நம்பியவர் பெரியார். எனவேதான் ராஜாஜி கொண்டு வந்த "குலக்கல்வி" திட்டத்தைக் கடுமையாக எதிர்த்தார் பெரியார், ஆனால், மாணவர்கள் கல்வியின் இன்றயமையாமையை உணராது இருக்கும் நிலை கண்டு கொதித்து எழுந்தார்.

"படிப்புக்குச் செலவு செய்வது ஒரு சேமிப்பு என்று கருதி உள்ளதையெல்லாம் செலவு செய்கிறார்கள் பெற்றோர்கள். பலர் முன்னோர் தேடி வைத்த சொத்துக்களை விற்றுப் படிக்கவைக்கிறார்கள். சிலர் கடனை வாங்கிப் படிக்க வைக்கிறார்கள். இப்படிப் பட்டவர்களின் பிள்ளைகள் பள்ளிகளில் தங்கள் கடமை என்ன என்று அறியாமல் காலித்தனத்தையும் போக்கிரித்தனத்தையும் பெற்றோர்களை வஞ்சிப்பதையும் ஏமாற்றுவதையும் தேசாபிமானம் என்று கருதிக் கொண்டு அதில் விழுந்து நாசமடைகிறார்கள். பள்ளிப் பிள்ளைகள் பள்ளி வாழ்க்கை வரையிலும் படிக்க வேண்டியதே அவர்களது கடமையாகும்' (இளைஞர்களுக்கு அழைப்பு, ப.15) என்று தமது உள்ளக் கிடைக்கையை அறிவுரையாக வழங்குகிறார் பெரியார்.

### சாதி ஒழிப்பு

மனித சமூகத்தின் இழி நிலைக்குக் காரணமாய்திகழ்வது சாதிய அமைப்பாகும். பிறக்கும் ஒரு குழந்தை பிறந்த அந்த

நொடியில் இருந்து தான் இறக்கும் காலம் வரையிலும் சாதிய இழிவைச் சுமந்துகொண்டே வாழ வேண்டியுள்ளது. இந்நிலை மாறி இத்தகைய இழிவுகள் மனித சமூக வாழ்வியலை விட்டு அறவே நீங்க வேண்டும் என்று போராடியவர் பெரியார். அவரது பெரு முயற்சியின் விளைவே தமிழகத்தில் யாரும் தங்களது சாதியின் பெயரை தம் பெயரோடு சேர்த்துக் கொள்வது கிடையாது. இத்தகைய சாதி இழிவு நிரந்தரமாக நீங்க வேண்டுமெனில், "சாதியை ஒழிக்கும் வேலை சாமான்யமான தல்ல. அய்க்கிய மாகாண சர்க்காரின் உத்தரவு அற்ப அளவுக்குத்தான் பயன்படுமே. தவிர, சாதியை அறவே இழப்பதற்குப் பயன்படாது என்பது உறுதி. எப்படியெனில், சாதியை ஒழிப்பதற்குப் பல அடிப்படையான முறைகள் இருக்கின்றன. சாதிப் பட்டங்கள் (அய்யர், முதலியார், பிள்ளை, அய்யங்கார், செட்டியார், நாயுடு, நாய்க்கர், ரெட்டியார், நாடார் (முதலியன) சட்டபுர்வமாகத் தடுக்கப்பட வேண்டும். புதிதாக மணம் புரிவோர் அத்தனை பேரும் கலப்பு மணம் செய்யுமாறு தூண்டக்கூடிய சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். ஒரே வகுப்பில், ஒரே சாதிப் பிரிவில் திருமணம் செய்பவர்களுக்கு பலகஷ்டமானநிபந்தனைகளையும், கட்டுத் திட்டங்களையும் விதித்து, அத்தகைய திருமணம் புரியவர்களுக்குச் சமுதாயத்தில் செல்வாக்கில்லாமல் செய்ய வேண்டும். சாதிகளைக் குறிக்கும் நெற்றிக் குறி, உடை, புணூல் முதலிய சின்னங்களையும் சட்டபுர்வமாகத் தடுக்க வேண்டும். இவ்வாறு செய்தால்தான் சாதிகள் அடியோடு ஒழியும்.' (வே. ஆனைமுத்து, (ப,ஆ.), ஈ.வெ.ரா. சிந்தனைகள், தொகுதி 3, ப.1614) என்று கலப்புத் திருமணங்களை ஊக்குவிப்பதன் மூலமும் கடுமையான சட்டங்கள் இயற்றப்படுவதன் வழியாகவும் சாதிய ஒழிப்பு நிகழும் என்று தெளிவுறுத்துகிறார் பெரியார்.

**மூடநம்பிக்கை**

"விஞ்ஞான அறிவுக்கு ஒத்துவராத சில பழக்கங்களும் நம்பிக்கைகளும் பண்டைக் கால மக்களிடம் இருந்தன. நாகரிகம் பெற்ற எல்லா இனத்தினரிடமும் இவைகள் இருந்தன. தமிழர்களிடமும் இத்தகைய பழக்கங்களும், நம்பிக்கைகளும் இருந்தன என்பதில் வியப்பில்லை" (சாமி, சிதம்பரனார், தொல்காப்பியத் தமிழர், நூல் அறிமுகம்) என்று தமிழரிடையே நெடுங்காலமாக நம்பிக்கைகள் நிலை பெற்றத் தன்மையைச் சுட்டுகிறார்.

காரண காரியத் தொடர்போடு கூடிய அறிவியல் புர்வமாக நிருபிக்கக் கூடிய செயல்கள் நம்பிக்கைகள் எனவும், அறிவியலுக்கு எதிரான செயல்கள் மூடநம்பிக்கைகள் எனவும் சுட்டப்படுகிறது. இவ்வகையான மூடநம்பிக்கைகள் மக்களின் அறிவை மறைத்து அறியாமையைப் பெருகச் செய்வதாக பெரியார் எண்ணினார். இம்மூடநம்பிக்கைகள் ஒழிய வேண்டுமென அவர் கருதினார்.

ஒரு விஷயத்தை ஒருவன் கூறுகிறான் என்று வைத்துக்கொள்வோம். உடனே நாம் என்ன செய்கிறோம்?

அது உனக்கு எப்படித் தெரியும்? அது உண்மை என்று நாங்கள் ஏன் நம்ப வேண்டும்? அது உண்மையென்று நம்ப ஆதாரம் என்ன? எனப் பொதுவாக மூன்று கேள்விகளைக் கேட்கிறோம்.

பிரதி தினமும் நாம் எத்தனையோ விஷயங்களை அறிகிறோம் அவைகளில் பலவற்றை நாம் கண்ணை மூடிக்கொண்டு நம்பி விடுகிறோம். அது உண்மையா? உண்மை என்பதற்கு ஆதாரம் என்ன? என்பன போன்ற விஷயங்களை நாம் கவனிப்பதே இல்லை.

நமது நம்பிக்கைகளில் பலவற்றை ஆராய்ந்து பார்த்தால், அவற்றிற்கு ஆதாரமே இல்லையெனத் தோன்றா நிற்கும். ஒரு காலத்தில் ஒரு விஷயம் உண்மையென்று யாரோ ஒருவர் சொன்னார் அல்லது, ஆராய்ந்து பாராமலேயே அதை நாம் உண்மை என நம்பிக்கொண்டோம், அல்லது, அது உண்மையாகத்தான் இருக்கு மென்று சுளுவில் நம்பிக் கொண்டோம்.

ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் நாம் முதலிலே கூறிய மூன்று கேள்விகளையும் கேட்டால் எந்த விஷயத்தின் உண்மையையும் நாம் அறிந்து கொள்ளலாம் (வே. ஆனைமுத்து, ஈ.வெ.ரா, சிந்தனைகள்) என்று மூட நம்பிக்கைகள் சமூகத்தில் இருந்து விலகுவதற்கான வழிமுறையைப் பெரியார் சுட்டுகிறார்.

### தொழிலாளர் நலன்

உலகத்தில் மனித இனம் நிம்மதியாகக் கவலையற்று மனநிறைவுடன் வாழத் தேவையான அனைத்து வளங்களும் உள்ளன. ஒருவன் மற்றவனைச் சுரண்டும் அவலமின்றி மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக வாழ முடியும். அத்தகைய வாழ்க்கைக்கு ஏற்ற சுழ்நிலையை உருவாக்குதே பொதுவுடைமையின் முதன்மையான நோக்கமாகும். எல்லோரும் வஞ்சனையின்றித் தம்மால் இயன்ற உழைப்பை நல்க வேண்டும். உழைந்த பின்னர் அதன் பயனைப் பிறர் பறித்துக் கொள்ள வயிறெரிந்து வாடாமல் எல்லாரும் இன்பமாய் வாழ வேண்டும். இது பொதுவுடைமையாகும்.

பொதுவுடைமை பேணிப் பாதுகாக்கப் பட தொழிலாளர் நலன் காக்கப்பட வேண்டும். சுரண்டல் என்பது அறவே கூடாது. எல்லோரும் தொழிலாளர்களின் கூலி உயர்வு பற்றி கவலைப்பட பெரியாரோ அதனினும் ஒருபடி மேலாக லாபத்தில் தொழிலாளி பங்குபெற வேண்டும் என்ற சிந்தனையை விதைத்தார். அதுவே உண் மையான தொழிலாளர் நலன் பேணும் செயல் என்று வலியுறுத்துகிறார் பெரியார். தொழிலாளர் இயக்கத்தை நடத்துபவர் எப்படிப்பட்டவராக இருக்கவேண்டும் என்பதையும், தொழிலாளர்கள் எதைப்பெற முயலவேண்டும் என்பதையும் பற்றி பெரியார் தமது ஆழ்ந்த சிந்தனைகளின் வழி வெளிப்படுத்துகிறார்.

“செல்வம் கடவுள் கொடுத்தார், தொழிலாளிகளைக் கடவுள் படைத்தார், கடவுள் செயலால், இவை இரண்டும் படைக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டு வருகின்றன. பிச்சையெடுப்பது அவன் தலைவிதி என்று நினைப்பவர் தொழிலாளர் இயக்கத்தின் அங்கத்தினராய் இருக்கவோ, தொழிலாளர் இயக்கத்தை நடத்தவோ சிறிதும் தகுதியற்றவர் என்றே சொல்லுவேன். அவர் எவ்வளவு பண்டிதராய் இருந்தாலும், பக்தராய் இருந்தாலும், தொழிலாளர் இயக்கத்திற்குப் பதரே! எதிரியேயாவர்!’

“இன்று நீங்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறீர்கள் இதை நாங்கள் முழு மனதோடு ஆதரிக்கிறோம். ஆனால், கூலி உயர்வுக்குச் செய்யும் வேலை நிறுத்தத்தை நாங்கள் அவ்வளவு முக்கியமானதாகக் கருதுவதில்லை! ஏனெனில் அது தொழிலாளிகளைத் தொழிலாளர்களாகவே இருக்கவைக்கும் வேலை என்பது எங்கள் கருத்து. ஏனென்றால் தொழிலாளிக்கு அதிக கூலியும், வீடு, வைத்தியம், படிப்பு வசதியும் முதலாளி செய்வது என்பது, ஒருவன் தன் மனைவியை எப்போதும் அடிமையாய் அடைத்து, தனது நலனுக்கு வைத்திருப்பதில் அவளை அந்தக் காரியத்தால் உற்சாகமூட்டி நல்ல பக்தி விசுவாசமுள்ள அடிமையாகச் செய்ய - தங்க வைரநகை, பட்டுச்சேலை, சீப்பு, சோப்பு, கண்ணாடி, வாசனை

எண்ணெய், பவுடர் வாங்கிக் கொடுப்பது போலவே தவிர, சம உரிமை அடைவதற்கு அல்ல. தொழிலாளிக்கு வேண்டியது கூலியும், நல்வாழ்க்கை வாழச் செலவுமே அல்ல என்பதை ஒவ்வொரு தொழிலாளியும் கவனத்தில் வைக்கவேண்டும். அவனுக்கு வேண்டியது தொழிலின் பயனைச் சம உரிமையுடன் அனுபவிக்க வேண்டும் என்பதோடு, தான் அந்த இயந்திரசாலைக்கு ஒரு கூட்டாளியாக - பங்காளியாக இருக்க வேண்டுமே ஒழிய, ஒரு தொழிலாளியாக - வேலைக்காரனாக இருக்கக்கூடாது என்பதேயாகும்...' (முனைவர் ஞானம், மேடைப்பேச்சில் வெற்றி பெறுவது எப்படி? பக்.69-70) என்று தமது உள்ளத்துள் ஊறிய தொழிலாளர் நலன் குறித்த சிந்தனையைப் பகிர்கிறார் பெரியார்.

**பெண் விடுதலை**

தமிழகப் பெண்ணியவாதிகளில் சற்றுத் தீவிரமான போக்குடையவர் பெரியார் ஆவார். பெண் விடுதலை குறித்து எழுந்த சீர்திருத்த இயக்கங்களில் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்திற்கு முதன்மையான பங்கு உண்டு. பெண்கள் விடுதலை பெற வேண்டுமெனில் பெண்களுக்கு கல்வி, சொத்துரிமை, மணக்கொடை மறுத்தல் முதலியவை அவர்களுக்கு உரிமையாக்கப்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தியவர் பெரியார்.

"பெண்கள் விடுதலை பெறுவதற்கு இப்போது ஆண்களைவிடப் பெண்களே பெரிதும் தடையாக இருக்கிறார்கள். ஏனென்றால் இன்னமும் பெண்களுக்குத் தாங்கள் முழு விடுதலைக்கு உரியவர்கள் என்கின்ற எண்ணமே தோன்றவில்லை. தங்களின் இயற்கைத் தத்துவங்களின் தன்மையே தங்களை ஆண்களுக்கு அடிமையாகக் கடவுள் படைத்திருப்பதன் அறிகுறிகளாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள்." (வேலுச்சாமி. ந., சமூக விஞ்ஞானி பெரியார், ப.128) என்று சுட்டிக்காட்டி பெண் விடுதலையை வலியுறுத்துகிறார். பெரியார்.

நம் நாட்டில் பெண்கள் கல்வி கற்று உயர வேண்டும் என்பதைப் பற்றி பெரியார், "பெண்கள் முன்னேற்றத்திற்குப் பெருந்தடை, வீட்டில் அவர்களை முடக்கி வைப்பதே. இது நாட்டு நடப்பை அறியவிடாமல், அவர்களின் அறிவை மறைக்கச் செய்வதாகும். நமது சமுதாயத்தில் பெண்கள் சார்ந்த தலைகீழான ஒரு புரட்சி ஏற்பட்டாலொழிய, பெரிய மாறுதல்களைக் கொண்டுவர இயலாது, அப்படி மாறுதல்கள் ஏற்பட்டாலும் அதனால் பயனொன்றும் விளையாது. பெண்கள் மனிதப் பிறவிகளாக நடமாட வேண்டுமானால், முதலில் அடுப்பங்கரையைவிட்டு அவர்களை வெளியேற்ற வேண்டும். பெண்கள் கல்வி பெறுவது அவர்கள் உரிமை மட்டுமன்று சமூக மாற்றத்திற்கு மிக இன்றியமையாததும் ஆகும். பெண்கள், கல்வி கற்றாலொழிய சமூக மாற்றங்கள் ஏற்படாது' (முனைவர் ஞானம், ப.71) என்று வலியுறுத்துகிறார்.

பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள மாப்பிள்ளை வீட்டார் கேட்கின்ற மணக்கொடை (வரதட்சணை) பற்றி பெரியார்,

"தமிழர்களிடம் இன்று பரவியுள்ள பெருநோய் ஒன்று உண்டு. அதுவே மணக்கொடை. பெற்றோர் பலர், தன் மகனின் கல்விக்காகப் பணம், செலவழிப்பதனைத் தங்கள் கடமையைச் சேர்ந்தது எனக் கருதாது, அதை ஏதோ ஒரு தொழிலில் போட்ட முதலீடாகவே கருதுகின்றனர். அந்த முதலீட்டை வட்டியுடன் சேர்த்தே, அவனுக்கு வரப்போகின்ற மனைவி மூலம் மணக்கொடையாய்ப் பெற்றுவிட

வேண்டுமென்று துடிக்கின்றனர். முறையான ஒழுக்கமும், அன்பும், தியாக உணர்ச்சியும் ஏற்பட்டால்தான் இம்மாதிரியான தீமைகளை ஒழிக்க இயலும். நம்நாட்டு இளைஞர்கள், மாணவர்கள், பட்டதாரிகள் ஆகியோர் செக்குமாடுகளாக இல்லாமல், பந்தயக் குதிரைகளாக மாறவேண்டும். தாமே பாடுபட்டு உழைத்து முன்னேற வேண்டும் என்னும் உயர்ந்த எண்ணம், நம் நாட்டு இளைஞர்களிடையே வளரவேண்டும்' (முனைவர் ஞானம், ப.72) என்று பெரியார் பெண் கல்வியும், சுயமரியாதைத் திருமணமும் பெண். விடுதலைக்கு இன்றியமையாதது என குறிப்பிடுகிறார்.

## முடிவுரை

"மக்களின் தாழ்ந்த நிலைக்கான காரணிகளைத் தனது அறிவைக் கொண்டு இடை விடாது சிந்தித்து, தாம் கண்ட உண்மைகளை அயராது தமது இறுதி மூச்சு வரை மேடைப் பேச்சுகளின் வழியே எடுத்துக்காட்டியவர் பெரியார்.

தமது மேடைப்பேச்சுகளின் வழியே சமுதாய முரண்களையும், மூடக் கருத்துக் களையும், பெண்ணடிமைத்தனம், சுரண்டல், சாதிய இழிவுகளை எதிர்த்து சமுதாய மாற்றத்தைப் பெரிதும் விரும்பியவர் பெரியார் ஆவார்.

மனித சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக விளங்கியக் காரணிகளை எதிர்த்ததோடு அன்றி, அக்காரணிகளை களைவதற்கான செயல்களையும் தீர்வுகளையும் முன்னெடுத்த ஒரே பேச்சாளர் பெரியார் மட்டுமே ஆவார்.

## துணை நின்ற நூல்கள்

1. சம்பந்தன், மா.சு., சிறந்த பேச்சாளர்கள், மணிவாகர் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு, 2005.
2. ராஜா, எஸ்.பி., கண்ணதாசன் மனதில் நின்ற மணி விழாத் தலைவர்கள், காமதேனு பப்ளிகேஷன்ஸ், சென்னை, முதற்பதிப்பு, 2006.
3. தந்தை பெரியார், இளைஞர்களுக்கு அழைப்பு, திராவிடர் கழக (இயக்க) வெளியீடு, சென்னை. ஒன்பதாம் பதிப்பு, 2011.
4. ஆனைமுத்து, வே., பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள், மூன்றாம் தொகுதி, சிந்தனையாளர் கழகம், திருச்சிராப்பள்ளி, முதற்பதிப்பு, 1974.
5. சிதம்பரனார், சாமி., தொல்காப்பியத் தமிழர், நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. முதற்பதிப்பு, 2008.
6. முனைவர் ஞானம், மேடைப் பேச்சில் வெற்றி பெறுவது எப்படி? மணிமேகலைப் பிரசுரம், சென்னை. முதற்பதிப்பு, 2015.